LIBRARY
18 APR 1962
STATE LEGISLATURE, MADRAS

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

---

**Thursday, the 16th March 1961.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Eleventh Standard in High Schools (North Arcot district)*

*861 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-62ல் வடாற்காடு மாவட்டத்தில் எத்தனை உயர்நிலைப்பள்ளிகளில் எந்தெந்த இடத்தில் 11-வது வகுப்பு ஆரம்பிக்க உத்திரவிடப்பட்டுள்ளன ?

(இ) அப்பள்ளிகளுக்கு வேண்டிய தலைமை ஆசிரியர்களைப் பயிற்சிபெற தேர்ந்தெடுத்தாகிவிட்டதா ?

(உ) அப்படியாயின், எந்த அடிப்படையில் எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) The XI Standard will be opened in 1962-63 and not in 1961-62.

(இ) No, Sir.

(உ) Does not arise.

SRI S. M. ANNAMALAI : சார், 1962-63-ல் ஆரம்பிப்பதற்கு முன்னால் சில ஆசிரியர்களைப் பொறுக்கி எடுக்கும் உத்தேசம் உண்டா ? அப்படியானால் அவர்களுக்கு என்னென்ன டிரெய்னிங் தரப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 11-வது வகுப்பிலே சில பாடங்களைச் சொல்லிக்கொடுக்க அவர்கள் எம்.ஏ. பட்டம் அல்லது எம்.எஸ்ஸி. பட்டம் பெற்றிருக்கவேண்டும். அதற்கான பயிற்சி கொடுக்க சர்வகலாசாலையினால் ஏற்பாடு செய்யப்பட்டு சென்ற இரண்டு ஆண்டுகளாக சில ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். இதற்கான பள்ளிகளைத் தேர்ந்தெடுத்த பிறகு ஆசிரியர்களை நியமிக்கும் விஷயம் கவனிக்கப்படும்.

SRI J. MATHA GOWDER : 1962-63-ல் இம்மாநிலத்திலுள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் 11-வது வகுப்பு ஆரம்பிக்கப்படுமா ? அல்லது ஜில்லாவிற்கு இவ்வளவு என்று ஒவ்வொரு ஜில்லாவிலும் சில பள்ளிகள் பொறுக்கி எடுக்கப்படுமா ?

[16th March 1961

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒரு சில பள்ளிகளில்தான் முதலில் ஆரம்பிக்கப்படும். 1962-63-ல் ஆரம்பிப்பதாக இப்போது உத்தேசித்திருப்பது 30 பள்ளிகள்.

SRI M. KALYANASUNDARAM : 11-வது வகுப்பு ஆரம்பிக்க பள்ளிகள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன? ஆரம்பிக்கப்படும் பள்ளிகள் தாலுகாவிற்கு ஒன்றாக ஆரம்பிக்கப் படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மொத்தம் 30 என்று சொன்னால் தாலுகாவிற்கு ஒன்று எப்படி வரும்? ஆரம்பத்தில் 30 தான் ஆரம்பிக்கப்படும்—ஒரு ஜில்லாவிற்கு 2, 3 தான் வரும்.

SRI T. T. DANIEL : May I know whether in the schools that are selected for the introduction of the Eleventh Standard, there will be accommodation for that purpose and may I also know whether the introduction of the Eleventh Standard in the High Schools will not affect the attendance in the colleges?

THE HON. SRI C. SUBRAMANIAM : All these matters have been taken into consideration and my plea has also been that this is a matter for reconsideration and that is a different thing. About the present programme, I may state that accommodation and all the other things would be taken into account before starting the Eleventh Standard.

SRI K. VINAYAKAM. In the contemplated course for the Eleventh Standard what would be the subjects to be taught and would it be similar to the Pre-University Course that is obtaining at the University level?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the idea is that Pre-University standard of knowledge should be reached in the Eleventh Standard.

SRI S. M. ANNAMALAI : ஸார், முதலில் தாலுகா தலைநகரங்களில் உள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் 11-வது வகுப்பு ஆரம்பிக்கப்படும் என்று சர்க்கார் மூலமாகப் பேசப்பட்டது. அது கைவிடப்பட்டதா? அப்படியானால் அதன் காரணம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : 11-வது வகுப்பை ஆரம்பிக்க அதற்கு வேண்டிய எல்லாவித வசதிகளும், அதற்கு மேல், ஆசிரியர்கள் எல்லாம் வேண்டியிருக்கிறது. அதை கவனித்துப் பார்க்கும்போது 30 ஆரம்பிப்பதே கஷ்டமாக இருக்கும் என்று தோன்றுகிறது. ஆகவே, இதில் அவசரப்படுவதைவிட கவனித்து எல்லாக் காரியங்களையும் செய்வது நல்லது.

SRI A. A. RASHEED : May I know whether the Eleventh Standard will be under the supervision of the University or the Secondary School Board?

THE HON. SRI C. SUBRAMANIAM : It will form part of Secondary Education and not University Education.